## <u>சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்</u>

அசல் வழக்கு எண். 64/2020

நாள்: 02.04.2026

வா.சா. 1 – ராஜதுரை

2026–ம் ஆண்டு ஏப்ரல் 02–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கிருஷ்ணவேனி, கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

<u>1, 2 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் M.Com படித்துள்ளேன். அண்ணாமலை பல்கலை கழகத்தில் படித்துள்ளேன் என்றால் சரிதான். படித்த ஆண்டு 1988–1989. எத்தனை வருட படிப்பு என்றால் 2 வருடம். என்னுடைய Bachelor Degree எங்கு படித்தேன் என்றால் கொளஞ்சியப்பர் Arts College, விருதாச்சலம். எனது பள்ளி படிப்பை ஆண்டிமடத்தில் உள்ள அரசு மேல் நிலைப் பள்ளியில் படித்தேன். என் தாத்தா பெயர் சாமிநாத படையாட்சி. என் பாட்டியின் பெயர் ஞாபகமில்லை. என் தாத்தாவுக்கு என் அப்பாவும், பவுனம்பாள் என்பவரும் இரு வாரிசுகள். என் தாத்தா இறந்த ஆண்டு தெரியாது. நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். என் பாட்டி இறந்த ஆண்டு சுமார் 1985,1986 ஆக இருக்கும். 2ம் பிரதிவாதி 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். 3 முதல் 5 பிரதிவாதிகள் 5ம் வகுப்பு வரை படித்திருப்பார்கள். எங்கள் குடும்பத்தில் உயர்கல்வி படித்த ஒரே நபர் நான் மட்டும் தான். என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் தாத்தா சாமிநாதன் இறந்த பிறகு எனது தந்தை 1ம் பிரதிவாதி வாரிசுரிமை அடிப்படையில் சுமார் 8 ஏக்கர் விலை நிலங்களையும், ஒரு ஓட்டு வீடையும் அடைந்து அனுபவம் செய்து வந்ததாக சொல்லியுள்ளது சரிதான். நான் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். B.Com. படித்தபோது

பொதுபோக்குவரத்து குறைவாக இருந்தது என்றால் நான் டவுன்பஸ்சில் கல்லூரிக்கு சென்று வந்தேன். நான் கல்லூரி முடித்த பிறகு தற்காலிக அரசு பணியில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. கூட்டுறவு வங்கியில் தற்காலிக பணியில் இருந்தேன். நான் என்னுடைய வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ தற்காலிக பணியில் இருந்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பணியில் இருந்ததாக சொல்லியுள்ளேன். இளநிலை உதவியாளராக தற்காலிக பணியில் சேர்ந்தேன். நான் என்னுடைய வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ இளநிலை உதவியாளராக தற்காலிக பணியில் சேர்ந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். காசாளராக பணிபுரிந்ததாக சொல்லியுள்ளேன். 1986-ல் பணியில் சேர்ந்தேன். 2 ஆண்டுகள் கழித்து பணி வரன்முறை செய்தார்கள். என்னுடைய வழக்குரையில் 1986-ல் கூட்டுறவு வங்கியில் செயலாளராக பணிபுரிந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எந்த கூட்டுறவு வங்கியில் தற்காலிக பணியில் சேர்ந்தேன் என்றால் ஜெயங்கொண்டம் உழவர் பணி கூட்டுறவு சங்கம். அந்த தற்காலிக பணியை மாத சம்பளத்தின் அடிப்படையில் பார்த்தேன். இளநிலை உதவியாளராக 2 ஆண்டுகள் பணிபுரிந்தேன். ஜெயங்கொண்டம் உழவர் பணி கூட்டுறவு சங்கத்தில் செயலாளராக பணிபுரிந்தபோது பணி நிரந்தரம் செய்யப்பட்டேன். தற்காலிக பணி செய்தபோது எனக்கு மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.3,750/- என்று நினைக்கிறேன். ஜெயங்கொண்டம் உழவர் பணி கூட்டுறவு சங்கத்தில் இருந்து 1993-ல் திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் ஆண்டிமடம் கிளையில் பணியில் சேர்ந்தேன். ஜெயங்கொண்டம் உழவர் பணி கூட்டுறவு சங்கத்தில் பணி செய்தபோது தினமும் வீட்டிற்கு சென்று பணிக்கு வந்தேன். எனக்கு திருமணம் 1989 ஆம் ஆண்டு நடைபெற்றது. என் திருமணம் பெற்றோர்கள் பார்த்து செய்து வைத்த

திருமணம். என் திருமணத்திற்கு சுமார் ரூ.50 ஆயிரம் செலவு ஆகியிருக்கும் என்றால் சரியல்ல. ரூ.25 ஆயிரம் இருக்கும். என்னுடைய திருமணத்திற்கு என் தந்தை செலவு செய்தார் என்றால் இல்லை. நான் கொடுத்த பணத்தில் திருமணம் செய்து வைத்தார். 3 வது பிரதிவாதிக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் 1980,1981. 3 வது பிரதிவாதியின் திருமணத்திற்கு சுமார் ரூ.3 லட்சம் செலவாகி இருக்கும் என்றால் சரிதான். 4 வது பிரதிவாதிக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் 1991, 1992. 4 வது பிரதிவாதியின் திருமணத்திற்கு சுமார் ரூ.5 லட்சம் செலவாகி இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் ரூ.4 லட்சம் செலவு ஆகியிருக்கும். 5 வது பிரதிவாதிக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் 2004 என்று நினைக்கிறேன். 5 வது பிரதிவாதியின் திருமணத்திற்கு சுமார் ரூ.6 லட்சம் செலவாகி இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் ரூ.5 லட்சம் செலவு ஆகியிருக்கும். 2 ம் பிரதிவாதியின் திருமணம் எந்த ஆண்டு நடைபெற்றது என்றால் 2008. 2 வது பிரதிவாதியின் திருமணத்திற்கு சுமார் ரூ.10 லட்சம் செலவாகி இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் ரூ.4 லட்சம் செலவு ஆகியிருக்கும். என்னுடைய திருமண செலவையோ, 2 முதல் 5 பிரதிவாதிகளின் திருமண செலவையும், எனது வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது வழக்குரையில் போர் வைத்து பாசனம் செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1995, 1996–ல் போர் அமைக்கப்பட்டது. போர் அமைக்க ரூ.5 லட்சம் செலவாயிருக்கும் என்றால் சரிதான். எங்களுடைய திருமண செலவையும், போர் அமைத்த செலவையும் எங்களது தந்தையார் செய்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் போர் உள்ளதை சொல்லவில்லை என்றால் சரிதான். போர் அமைத்த பிறகு 1995 மற்றும் 1996–ல் 1 டன் கரும்பின் விலை ரூ.1,250/– இருக்கும். என் தந்தை 8 ஏக்கர் பயிர் செய்திருப்பார் என்றால் தாவா சொத்து முழுவதையும் என் தந்தை

தான் பயிர் செய்தார். தாவா அ அட்டவணை சொத்தில் 3 முதல் 17 வரையுள்ள இனச் சொத்துகள் என் தந்தையாரால் சுயமாக கிரையம் பெறப்பட்டது என்றால் 11 இனச் சொத்தை தவிர மற்ற சொத்துகள் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார். 11வது இனச் சொத்து என்னுடைய கிரையச் சொத்து. 11வது இனச் சொத்தை 1977–ல் கிரையம் வாங்கினேன். தாவா சொத்துகளில் பயிர் செய்யப்பட்ட கரும்புகள் ஒப்பந்த அடிப்படையில் எம்.ஆர்.கே சுகர் பேக்டரி மற்றும் அம்பிகா சுகர் பேக்டரி ஆகியவற்றால் கொள்முதல் செய்யப்பட்டது என்று வழக்குரையில் சொல்லியுள்ளது சரிதான். மேற்படி சுகர் பேக்டரிகளுக்கு கரும்பு கொள்முதல் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 டன் கரும்பின் விலை ரூ.1,250/–க்கு கொள்முதல் செய்யப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஒரு மகன், ஒரு மகள் வாரிசுகள். என்னுடைய மகன், மகள் பள்ளி கல்வி மற்றும் உயர் கல்வியை எங்கு படித்தார்கள் என்றால் என் மகன் டான்போஸ்கோ பள்ளி வரதராஜன் பேட்டை, கப்பல் பொறியார் படிப்பை சென்னையிலும் படித்தார். என் மகள் அலங்கார அன்னை மேல்நிலைப்பள்ளி, வரதராஜன்பேட்டை, J.J.இன்ஜினியரிங் கல்லூரி, திருச்சி. என் மகன், மகள் தினமும் பள்ளிக்கு சென்று வந்தார்கள். விளந்தை கிராம நத்தம் சர்வே எண்.583/11 2.68 ஏர்ஸ் அதில் உள்ள மாடிவீடு உட்பட எப்போது வாங்கினேன் என்றால் நான் வாங்கவில்லை என் மகன் வாங்கினான், எனக்கு தெரியாது. அணிக்குறிச்சான் வடக்கு கிராமத்தில் உள்ள சர்வே எண்கள். 27/4 பி, 27/4 டி, 27/6 பி, 27/7 பி, 24/4 பி ஆகிய சொத்துகள் அனைத்தும் என் தந்தையால் என் பெயரில் வாங்கப்பட்ட சொத்துகள் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்ணில் குறிப்பிட்டுள்ள சொத்துகள் A அட்டவணை சொத்துகளுக்கு அருகாமையில் உள்ள சொத்துகள் என்றால் சரிதான். அந்த சொத்துகள் நான் கிரையம் வாங்கிய சொத்துகள். மேற்படி

சொத்துகளை என்னுடைய பணி பதிவேட்டில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பணிக்கு அது அவசியமில்லை. கூட்டுறவு வங்கி அரசு வங்கி என்றால் சரியல்ல. கூட்டுறவு வங்கி அரசு சார்ந்த நிறுவனம். என்னுடைய மாத சம்பளத்தை என் தந்தையிடம் கொடுத்ததற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. 2008 வரையில் என் தந்தையிடம் தான் மாத சம்பளத்தை கொடுத்தேன். என் தந்தையிடம் மாத சம்பளத்தில் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

**1, 2 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.